15

09

**வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம் பில்லனகுப்பம் ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.சு.சிவக்குமார்.பி.எஸ்.சி.,**

ந.க.எண் : 602/2018/இ2 நாள்:03.01.2020

பொருள்: நீல வரைபட ஒப்புதல் - பில்லனகுப்பம் ஊராட்சி - கே.திப்பனப்பள்ளி கிராம சர்வே எண்: 599/1-ல், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின் மூலம் அமைய உள்ள கட்டுமானத்திற்கு, 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கட்டிக்கொள்ள நீல வரைபடம் அங்கிகாரம் மற்றும் அனுமதி அளித்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :
1) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின், வேலூர் கோட்டம், என்பவரின் விண்ணப்ப நாள்: 02.12.2019.
2) திரு.ஜெ.முகிலன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்-III, அறிக்கை நாள்:04.12.2019.
3) அரசாணை எண்: 255/ஆர்டி (சி2) நாள்:18.08.97
4) தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994, ஊரக வளர்ச்சித்துறை, சென்னை-டி.ஓ. கடிதம் எண்: 132109/07 டி.ஆர்.டி/பி.சி.ஏ. நாள்:14.02.97.
5) ஊராட்சி தீர்மான எண்:04/2019, நாள்:03.01.2020.
6) நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியம், வேலூர் கோட்டம் அவர்களின் கடித ந.க.எண்:137/ஆர்2/வேகோ/2020, நாள்:03.01.2020.
7) உதவி பொறியாளர் ஊராட்சி ஒன்றியம் வேப்பனப்பள்ளி அறிக்கை நாள்:27.12.2019.

********

உத்திரவு:

வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சி, கே.திப்பனப்பள்ளி கிராமத்தில் சர்வே எண்: 599/1-ல், 27000.00 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள மணையில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின் மூலம், 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கட்டுமானத்திற்கு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நீல வரைபட அங்கீகாரம் மற்றும் அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) இந்த நீல வரைபட அனுமதி 03.01.2020 தேதியில் அனுமதிக்கப்பட்டு 02.01.2021 தேதி வரை அமுலில் இருக்கும்.
2) இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படிதான் கட்டிடம் கட்டப்படவேண்டும் மேற்படி வரைபடங்கள் தனி அலுவலர் மற்றும் இது சம்மந்தமான அலுவலர்கள் பார்வையிடும்படி பிரேம் போட்டு வைக்கவேண்டும்.
3) வரைபடத்தில் உள்ள அளவுகள் அல்லாமல் மாற்றி தன் சௌகரியப்படி கட்டிடம் கண்டிப்பாக கட்டக்கூடாது. அவ்வாறு கட்டிடம் கட்டுவது தெரியவந்தால் நீல வரைபட அனுமதி எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
4) கட்டப்போகும் கட்டிடத்தில் வேறு எவ்விதமான விஸ்தரிப்போ அல்லது கூடுதல் கட்டுமானம் செய்ய நேரிட்டால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்து அனுமதி பெற்று கட்டிடம் ஆரம்பிக்க வேண்டும்.
5) வாசற்படிகள், ஜன்னல்கள், வெண்டிலேட்டர்கள், கைப்பிடிகள் மற்றும் பால்கனி முதலியவைகள் சொந்த நிலத்தில் எல்லைக்கு உட்பட்டு இருக்கவேண்டும். ஊராட்சி அல்லது அரசினர் இடத்தில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் இல்லாமல், தெருவில் இருந்து நான்கடி உட்பக்கத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

Executive Engineer
Vellore Division
Slum Clearance Board

/த.பி.ப/

Scanned by CamScanner

6) சமையலறையில் புகை வெளியே போக சரியான வசதியான புகைக்கூண்டு தடுத்துக்கட்ட வேண்டும்.

7) சாதாரணமான முறையில் செப்டிக் டேங்க் கழிவறை ஆகிய வசதிகள் கட்டிடப் பொறியாளரின் சரியான அளவுகள் படியும் கட்ட வேண்டும்.

8) செப்டிக் டேங்கில் உள்ள கழிவுநீர் பொது சுகாதாரத்திற்கு சீர்கேடு ஏற்படா வண்ணம் கட்டப்பட வேண்டும்.

9) காற்று வசதிக்கு உண்டான ஜன்னல் வெண்டிலேட்டர் போதிய அளவு அமைக்க வேண்டும்.

10) மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் ஊராட்சிக்கு வரிவிதிப்பிற்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலதிற்குள் வேலைகள் முடிக்காவிட்டால் மீண்டும் விண்ணப்பித்து மறு உத்திரவு பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி மறு உத்திரவு பெறாமல் எந்த ஒரு விதமான கட்டிட வேலையும் செய்யக் கூடாது.

11) கட்டிடத்தை சுற்றி பலன் தரும் செடிகள் வைக்கப்படவேண்டும்.

12) மழைநீர் சேகரிப்பு தொட்டி 1 மீட்டர் நீளம், 1 மீட்டர் ஆழம் மண்வேலை செய்து இதில் செங்கற்களைக் கொண்டு மழைநீர் சேகரிப்பு தொட்டி கட்டி தொட்டினுல் மணல் 1 அடி கனம் மற்றும் 20.மி.மீ அளவுள்ள செங்கல் 1 அடி கனம் நிரப்பு வைக்கவேண்டும்.

13) மேற்படி கூறியுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கட்டிடத்திற்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டும். வேறு காரியத்திற்கு எதுவும் பயன்படுத்தக்கூடாது.

14) பார்வை 6-ல் கண்டுள்ள நிர்வாக பொறியாளர் கடிதத்தின் படி பணி நடைபெறும் இடத்தில் உள்ள அங்கிகறிக்கப்பட்ட நிலவரை படத்தில் அமைந்துள்ள OSR நிலத்தினை (2865.97 ச.மீ) தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்திலிருந்து ஒப்புதல் பெற்று ஊராட்சிக்கு தானம் பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைகப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 31.03.2020-க்குள் OSR நிலம் ஒப்படைக்கப்படவேண்டும். இல்லை எனில் இந்த உத்திரவு இரத்து செய்யபடும் என அறிவிக்கப்படுகிறது.

15) மேலும் தொழிளாளர் பங்கு தொகையை பணிகள் முடிந்தவுடன் மொத்த செலவின தொகையில் 1% செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கட்டுமானத்தின் மொத்த திட்ட மதிப்பிட்டில் 1% - னை (ரூ.28,76,998/-) "The Manual Workers General Welfare Fund, Union Bank of India, Chennai. Account No. 530601010038239, IFSC No. UBIN0553069" என்ற வங்கி கணக்கிற்கு செலுத்தி அறிக்கியினை இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: 1. மனுதாரருக்கு வரைபடம் - 1.

**தனி அலுவலர் /வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)**
**பில்லனகுப்பம் ஊராட்சி**

3/1/2020

பெறுதல்:

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றும் வாரியத்தின்,
வேலூர் கோட்டம்,
பிளாட் எண்:22,9வது தெரு,
கோபலபுர்ம், களிங்சூர்,
வேலூர் - 632006.

Executive Engineer
Vellore Division

Scanned by CamScanner

87

பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி, பி.இ.,<br>நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,<br>தருமபுரி மண்டலம்,<br>83, பிடமனேரி ரோடு,<br>அப்பாவு நகர்,<br>தருமபுரி - 636 701.<br>மின்னஞ்சல் முகவரி -<br>dpirdd@gmail.com.<br>தொலைபேசி எண். 04342.260399. | தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி<br>அலுவலர்(கி.ஊ)<br>பில்லனகுப்பம் ஊராட்சி,<br>கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம். |

ந.க.எண்.2667/2019/தம, நாள். .12.2019.

ஐயா,

பொருள்: தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் தருமபுரி மண்டலம் - கிருஷ்ணகிரி மாவட்டம் / வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - பில்லனகுப்பம் ஊராட்சி மற்றும் கிராமம் ச.எண்கள்.599/1–ல் 27000 ச.மீ பரப்பளவுள்ள மனையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கொண்ட தொகுப்பு கட்டிடத்திற்கு அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:
1) மனுதாரர் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்களின் விண்ணப்பம் நாள். 13.11.2019.
2) இவ்வலுவலக கடிதம் இதே எண் ( Centage Charge) நாள்.25.11.2019.
3) மனுதாரரிடம் நன்னிலை வரி, செலுத்தி பெறப்பட்ட நாள்.02.12.2019.
4) அரசாணை எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 04.06.2004.
5) அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1), நாள்.01.02.2019

-------

கிருஷ்ணகிரி மாவட்டம் / வட்டம் / ஊராட்சி ஒன்றியம், பில்லனகுப்பம் ஊராட்சி. மற்றும் கிராமம், ச.எண்.599/1.ல் 27000 ச.மீ பரப்பளவு உள்ள மனையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 13 பிளாக்குகளில் G+3 தளங்களுடன் மொத்தம் 528 வீடுகள் கொண்ட தொகுப்பு கட்டிட மனைக்கு A to R என எல்லையிட்டு மனை வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ(தம) எண்.141/2019 என எண்ணிட்டு மனை ஒப்புதலும் அம்மனையில்

| | | No.of Dwellings |
|---|---|---|
| Type –A (HFA 33/2017)<br>A,B,C,J,K,& M | | |
| Ground Floor | 37.34 Sq.m | 192 |
| First Floor | 37.34 Sq.m | |
| Second Floor | 37.34 Sq.m | |
| Third Floor | 37.34 Sq.m | |
| 6 Block – 32 வீடுகள்/ பிளாக் | | |
| 192 Houses | 7170.96 Sq.m | |

Scanned by CamScanner

| Type –B (HFA 33/207) | | |
|---|---|---|
| Ground Floor | 37.30 Sq.m | 336 |
| First Floor | 37.30 Sq.m | |
| Second Floor | 37.30 Sq.m | |
| Third Floor | 37.30Sq.m | |
| 7 Block – 48 வீடுகள்/ பிளாக் | -- | |
| 336 Houses | 12532.80 Sq.m | |
| மொத்த கட்டிடபரப்பு 528 வீடுகள | 19703.76 Sq.m | |

| மொத்த மனையின் பரப்பளவு | தேவையான OSR | ஒதுக்கப்பட்ட OSR |
|---|---|---|
| 27000 ச.மீ | 2700.00 ச.மீ | 2865.97 (10.61%) |

மேற்கண்ட பரப்பு கொண்ட குடியிருப்பு கட்டிடத்திற்கு G+3 கீழ்கண்ட நிபந்தனைகளுடன் க.வ/ந.ஊ.து(தம)எண்.33A/2019,33B/2019,33C/2019 என எண்ணிட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) கட்டிடத்தில் Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
4) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 11.10.2002-ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
5) கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
6) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
7) கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட்டு எப்போதும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.
8) அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி 1) துறை நாள் 3.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
9) சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் MATERIALS பயன்படுத்தப்பட வேண்டும்.
10) இக்கட்டிடத்தில் அவசரகால வெளியேறும் வழிகள் பொது கட்டிட விதிகளின்படி அமைக்கப்பட வேண்டும்.
11) இக்கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து மனுதாரரும் சம்பந்தப்பட்ட பொறியாளரும் முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
12) அரசாணை எண்.113 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.12.2012-ன்படி உத்தேச கட்டுமானத்தில் கண்காணிப்பு (CCTV) கேமரா பொருத்தப்பட வேண்டும்.
13) கட்டுமானத்திற்கு non-combustible material பயன்படுத்தப்பட வேண்டும்.

Scanned by CamScanner

84



சிறப்பு நிபந்தனை

"நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்டஅனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (அரசாணை செயல்முறை ஆணைகள்) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது

பார்வை 5-ல் காணும் அரசாணை எண்.18 விதி 41(b)-ன் படி வரைபடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள OSR பகுதியினை, உள்ளாட்சி தானமாக பெற்று உள்ளாட்சியால் பராமரிக்கப்பட வேண்டும்.

சிறப்பு நிபந்தனை

The Order is passed subject to the outcome of the writ petition WP (MD) No.8948 of 2019.

மேற்படி, ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச்சான்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
தருமபுரி மண்டலம், தருமபுரி

இணைப்பு
வரைபடங்கள் - 2 தொகுப்புகள் மட்டும்.

நகல்
Executive Engineer,
Tamil Nadu Slum Clearance Board,
Vellore Division,
Plot No.22, 9th Street,
Gopalapuram,
Kazhinjur,
Vellore – 632 006.

EXECUTIVE ENGINEER,
Vellore Division / TNSCB
Vellore - 632 006

Scanned by CamScanner

## குடும்ப அங்கத்தினர் மற்றும் ஆதாரங்கள்

| குடும்பத்தினரின் விபரங்கள் | உறவுமுறை | வயது | ஆதார் எண். | கையொப்பம் / இடதுகை பெருவிரல் ரேகை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

| | | | |
|---|---|---|---|
| புதிய உணவு பங்கீட்டு அட்டை எண். | | தேதி | |

* (குடும்பத் தலைவரின் ஆதார் மற்றும் வாக்காளர் அட்டை விபரங்கள்)

| | |
|---|---|
| ஆதார் அட்டை எண். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாக்காளர் அட்டை எண். | | தேதி | | வாக்காளர் தொகுதி | |

படிவம் - VI - A விலை: ரூ.10/-

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

**ஒதுக்கீடு ஆணை மற்றும் அடையாள அட்டை**

ஒதுக்கீடு ஆணை மற்றும் நாள். ஒதுக்கீடு வரிசை எண்.

குடும்ப புகைப்படம்

| | | | |
|---|---|---|---|
| ஒதுக்கீடு செய்யப்படும் திட்டப்பகுதியின் பெயர் | | வெளியேற்றப்பட்ட வீட்டின் முகவரி | |
| குடியிருப்பு / மனை எண். | | வெளியேற்றப்பட்ட பகுதியின் பெயர் | |
| ஒதுக்கீடுதாரர் பெயர் | | கதவு எண் | |
| தந்தை / கணவர் பெயர் | | தெரு. | |
| | | மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி / பஞ்சாயத்து வட்டம் / கோட்டம் | |
| ஒதுக்கீடுதாரர் கையொப்பம் / இடதுகை பெருவிரல் ரேகை | | தேதி | |
| அலுவலக முத்திரை | | வழங்கிய அலுவலர் கையொப்பம் | |
| | | வகிக்கும் பதவி | நிர்வாகப்பொறியாளர் |
| | | தேதி | |

True Copy
SE/CC-I/TNSCB

Scanned by CamScanner

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

## 397A, வடக்கு ஹவுசிங் யூனிட், செல்வபுரம், கோயம்புத்தூர்-26

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய நிர்வாகப்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : A.L.C.குமார், பி.இ.,

நாள்:

ந.க.எண்.

பொருள்: ஒதுக்கீடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் - திட்டப்பகுதியில் கு.எண். ஒதுக்கீடு செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1. வாரிய தலைவர் அவர்களின் ந.க.எண். நாள்.

ஆணை

தமிழ்குடிசைப்பகுதி மாற்று வாரிய திட்டப்பகுதியில் குடியிருப்பு எண். ………
ஐ திருமதி / திரு. …………………… த/பெ க/பெ…………………… பெயரில் கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

1. அ. ஒதுக்கீடுதாரர் இக்கடிதம் கிடைக்கப்பெற்ற ஏழு தினங்களுக்குள் பயனாளிகளின் பங்களிப்பு தொகை மற்றும் பராமப்பு கட்டணம் ரூ. ஐ செலுத்த வேண்டும். தற்போது வசித்து வரும் குடிசையை அப்புறப்படுத்தி விட்டு அதற்கான சான்றிதழினை உதவிப்பொறியாளரிடம் பெற்ற பின்னர் குடியிருப்பு ஒப்படைக்கப்படும்.

ஆ. எக்காரணத்தைக் கொண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வருடைய குடும்ப அங்கத்தினர்கள் பெயரிலோ அல்லது உறவினர்கள் பெயரிலோ அல்லது மற்ற எந்த நபர் பெயரிலோ ஒதுக்கீடு மாற்றம் செய்யப்பட மாட்டாது.

2. அ. பராமரிப்பு மற்றும் இதர பொதுப்பணிகளை கவனித்துக் கொள்ளளும் பொருட்டு இத்திட்டப்பகுதியில் உள்ள ஒதுக்கீடுதாரர்கள் குடியிருப்புகளுக்காக குடியிருப்போர் நலச்சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கம் ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்டதும் (வாரியத்தில் அங்கீகரிக்கப்பட்டது) ஒதுக்கீடுதாரர் அந்தச் சங்கத்தில் உறுப்பினராகி அதன் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

ஆ. சங்கம் பதிவு செய்த பின் சங்கம் நிர்ணயம் செய்யும் மாதாந்திர பராமரிப்பு தொகையை பிரதி மாதம் 10-ம் தேதிக்குள் ஒதுக்கீடுதாரர் சங்கத்திற்கு நேரிடையாக செலுத்த வேண்டும். பராமரிப்பு பணியினை சங்கமே தொடர்ந்து செயல்படுத்தும்.

இ. அரசு / ஊராட்சி அமைப்பு / கு.மா. வாரியம் அவ்வப்போது நடைமுறைப்படுத்தும் / விதிக்கம் வரிகள், பராமரிப்பு கட்டணம், மின் கட்டணம், குடிநீர் மற்றும் கழிவு நீர் போன்ற இனங்களுக்கா தொகையை ஒதுக்கீடுதாரரே செலுத்த வேண்டும்.

3. ஒதுக்கீடுதாரர் பெயரில் குடியிருப்பிற்கா மின் இணைப்பை பெற்றுக் கொள்ள மின்சார வாரியத்தை அணுக வேண்டும். மாதாந்திர மின் கட்டணத் தொகையினை ஒதுக்கீடுதாரரே செலுத்த வேண்டும். விதிகளுக்கு புறம்பாக மின் இணைப்பு பெற்றுள்தாக பின்னர் தெரிய வந்தால், மின் இணைப்பு துண்டிக்கப்படுவதோடு ஒதுக்கீட ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. இக்குடியிருப்பு தேவையில்லை எனில் அதனை வாரியத்திடம் மட்டுமே ஒதுக்கீடுதாரர் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

5. ஒதுக்கீடுதாரர் காலமாகிவிட்டால் கணவர் / மனைவி அல்லது அவரது நேரடி வாரிசுதாரர்கள் இற[illegible] வாரிசு சான்றிதழ் சமர்ப்பித்து மனு செய்தால் உரிய ஆய்வுக்குப் பின் தகுதி இருப்பின் வாரிசுதாரர் பெயரில் பெயர் மாற்றம் செய்ய பரிசீலிக்கப்படும்.

6. ஒதுக்கீடுதாரர் குடியிருப்பை வேறு நபருக்கு விற்கவோ, வசிக்க அனுமதிக்கவோ, வாடகைக்கு அனுமதிக்கவோ அல்லது வேறு எந்த வகையிலும் பயன்படுத்தவோ கூடாது. மீறினால் எந்தவித முன் அறிவிப்புமின்றி ஒதுக்கீடு ரத்து செய்யப்படும் குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்படுவர். அத்துடன் ஒதுக்கீடுதாரர் மற்றும் அவரது குடும்ப அங்கத்தினர்கள் பெயர் நீக்கம் செய்யப்பட்டு இனிவரும் காலங்களில் வாரியம் மூலமாக எந்தவிதமான சலுகையும் பெற தகுதியற்றவர்களில் வாரியம் மூலமாக எந்தவிதமான சலுகையும் பெற தகுதியற்றவர் எனவும் அறிவிக்கப்படும்.
தவிர ஒதுக்கீடுதாரர் குடியிருப்பில் வசிக்காமல், வேறு நபருக்கு வாடகைக்கு அல்லது உள்ளவாடகைக்கு அல்லது விற்பனை செய்திருப்பது தெரியவந்தால் உடனடியாக குடியிருப்பின் மீதான ஒதுக்கீடு ரத்து செய்யப்படுவதோடு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971 சட்ட பிரிவு 62 (பி) ன்படி மூன்றாண்டு காவல் தண்டனை மற்றும் ரூ.1000/- அபராதம் விதிக்கப்படும்.

7. ஒதுக்கீடு விதிகளை கீழ்க்கண்ட விதங்களில் மீறியுள்ளதாக தெரியவந்தால் ஒதுக்கீட்டானை ரத்து செய்வதோடு குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்பட்டு குடியிருப்பை வாரிய வசமாக்கி, மீறியவர் மீது கிரிமினல் மற்றும் சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அ. வாரிய குடியிருப்புகளில் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
ஆ. ஒதுக்கீடு செய்த இடத்திற்கு அதிகமாக ஆக்கிரமித்தல்.
இ. குடியிருப்பில் மாற்றம் செய்தல் அல்லது விரிவுபடுத்தல்.
ஈ. ஒதுக்கீடு செய்த குடியிருப்பு தவிர சொந்தமாக வேறு வீடு (அ) மனை அல்லது வேறு இடத்தில் வைத்திருத்தல்.
உ. தவறான தகவல் தந்து ஒதுக்கீடு பெற்றிருத்தல்.
ஊ. ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்பை சரியாக பராமரிக்காமல் பழுதடைந்த நிலையில் வைத்திருத்தல்.
எ. சுற்றுச் சூழலையும் பேணாது, சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் வைத்திருத்தல்.
ஏ. வாரிய சொத்திற்கு சேதம் விளைவித்தல்.

8. ஒதுக்கீடுதாரர் தொடர்ந்து குடியிருப்பில் வசிப்பதாக கண்டறியப்பட்டால் நிபந்தனைக்குட்பட்டு கிரயப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. ஒதுக்கீடுதாரர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்பில் 30 நாட்களுக்குள் குடியேற வேண்டும். தவறினால் அவருக்கு அக்குடியிருப்பு தேவையில்லையெனக் கருதி ஒதுக்கீட்டை ரத்து செய்யப்படும்.

10. ஒதுக்கீடுதாரருக்கு வழங்கப்பட்ட இந்த ஒதுக்கீடு உத்தரவு தேவைப்படும்போது வாரியத்தின் பார்வைக்கு தவறாமல் காண்பிக்கப்பட வேண்டும்.
11. வாரிய விதிகளின்படி ஒதுக்கீடுதாரர் குடியிருப்பை எவருக்கும் விற்பனை மற்றும் அடமானம் செய்தல் கூடாது.

பெறுநர்

எஸ்டேட் அலுவலர் நிர்வாகப்பொறியாளர்

நகல் :
1) உதவி நிர்வாகப்பொறியாளர், குடிசைப்பகுதி மாற்று வாரியம், ஒதுக்கீடுதாரர்களை, தற்போது வசித்து வரும் குடிசையை அப்புறப்படுத்தி அதற்கான சான்றிதழை வழங்கி பின்னரும் பயனாளிகளின் பங்களிப்பு எஸ்டேட் அலுவலர் வசூல் செய்த பிறகும், குடியிருப்பை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
2) எஸ்டேட் அலுவலர் பயனாளிகளின் பங்களிப்பு தொகையினை வசூல் செய்து, அதன் விபரத்தை வாரியத்திற்கு தெரிவிக்கும் பொருட்டு.3) அ1 கோயம்புத்தூர் கோட்ட அலுவலகம்.

True Copy

Scanned by CamScanner